வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 06.04.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- பிஜேபியின் 47ஆவது நிறுவன தினத்தை முன்னிட்டு, பிரதமரும், பிஜேபியின் மூத்த தலைவருமான திரு. நரேந்திர மோடி இன்று கட்சித் தொண்டர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- நாட்டின் ராணுவ வீரர்களுக்கு சிறந்த சுகாதார வசதி வழங்குவது அரசின் முன்னுரிமை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில், வரும் வியாழக்கிழமை, ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை முடிவடையவுள்ளது.
- பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்ய நாட்டில் வலுவான சட்டங்கள் உள்ளன என்று தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் விஜயா ரஹத்கர் கூறினார்.

***மோடி (15 )***

பாரதீய ஜனதா கட்சியின் 47ஆவது நிறுவன தினத்தை முன்னிட்டு, பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று கட்சித் தொண்டர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். தேசத்திற்கு சேவை செய்ய வாய்ப்பளித்த கட்சிக்கு நன்றி தெரிவிக்க இந்த நாள் ஒரு வாய்ப்பாக விளங்குகிறது என்று பிரதமர் காணொளி காட்சி மூலம் கூறினார். இந்நிகழ்ச்சியில் டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி, தீன் தயாள் உபாத்யாயா, நானாஜி தேஷ்முக், குஷாபாவு தாக்கரே, அடல் பிகாரி வாஜ்பாய், டாக்டர் லால் கிருஷ்ண அத்வானி மற்றும் முரளி மனோகர்

ஜோஷி உள்ளிட்ட பிஜேபியின் நிறுவனர்களையும் அவர் நினைவு கூர்ந்தார். கட்சிக்காக இரவும் பகலும் உழைத்த கட்சித் தொண்டர்களின் பங்களிப்பையும் அவர் பாராட்டினார்.

பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது குறித்த தமது வாக்குறுதியை பிஜேபி நிறைவேற்றியுள்ளது என்றும், 2029ஆம் ஆண்டு தேர்தல்கள் நாரிசக்தி வந்தன் அதினியம் விதிகளின்படி நடத்தப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

***சி.பி. ராதாகிருஷ்ணன் (08 )***

மாநிலங்களவைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் மேலவையின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 19 உறுப்பினர்களுக்குப் இன்று பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். மத்திய இணையமைச்சர் திரு.ராம்தாஸ் பந்து அதாவலே மற்றும் மூத்த தேசியவாத காங்கிரஸ் தலைவர் திரு. சரத் சந்திர பவார் ஆகியோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இவ்விரு தலைவர்களும் மகாராஷ்டிராவிலிருந்து மீண்டும் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

***ராஜ்நாத் சிங் (13 )***

நாட்டின் ராணுவ வீரர்களுக்கு சிறந்த சுகாதார வசதி வழங்குவது அரசின் முன்னுரிமை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று ராணுவ மருத்துவப்படை நிறுவன தினத்தில் உரையாற்றிய அவர், மோசமான வானிலை மற்றும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வீரர்கள் இரவும் பகலும் நாட்டிற்குச் சேவை செய்கிறார்கள் என்று கூறினார். நாட்டின் பிற பகுதிகளிலும் ஆராய்ச்சி மற்றும் பரிந்துரை மருத்துவமனை போன்ற வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மருத்துவப் படைகளின்

அடித்தளமாக விளங்கும் ராணுவ செவிலியர்களின் ஓய்வுக்குப் பின்னர், முன்னாள் ராணுவத்தினர் என்ற அந்தஸ்து வழங்கப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார். அவர்களுக்கு முன்னாள் படைவீரர்கள் என்ற அந்தஸ்து வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

*புதுச்சேரி தேர்தல் 1 (05 )*

கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில், வரும் வியாழக்கிழமை, ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை முடிவடையவுள்ளது. இந்நிலையில் வாக்காளர்களைச் சென்றடைவதற்கான இறுதிக்கட்ட முயற்சியில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

*புதுச்சேரி தேர்தல் 2 (17 )*

பிஜேபி மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான திரு.அமித்ஷா, புதுச்சேரியில் இன்று மாலை தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக திருக்கனூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணியை வெற்றி பெறச் செய்தால், புதுச்சேரியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதாக அவர் கூறினார். மேலும், வளர்ச்சியை நோக்கிய பாதையில் செல்வது அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக இன்று காலை, புதுச்சேரி, லாஸ்பேட்டையில் காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றினார். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்குவதில் காங்கிரஸ் உறுதியாக உள்ளது என்றும், வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் 2 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளித்தல், பொது மற்றும்

தனியார் துறைகளில் 30 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம், உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், புதுச்சேரியில் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும்,

*புதுச்சேரி தேர்தல் 3 (14 )*

இங்குள்ள வழிபாட்டுத் தலங்கள், பள்ளிக்கூடங்கள் அருகில் மதுபான கடைகள் பெருகிவிட்டதாகவும் அரசு வேலைக்கான வயது வரம்பு 40 வயதாக உயர்த்தப்படும் என்றும் திரு. ராகுல் காந்தி தேர்தல் பிரச்சாரத்தின் போது கூறினார். மேலும் அவர் பேசுகையில், புதுச்சேரியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் புற்று நோய் உள்ளிட்ட நோய்களுக்கு, வருடத்திற்கு 20 லட்சம் ரூபாய் மருத்துவ காப்பீடு வழங்கப்படும் என்றும், மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசாக இருக்கும் என்றும், காங்கிரஸ் ஆட்சி பதவியேற்ற 6 மாதத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

நாம் தமிழர் கட்சியின் தலைவர் திரு. சீமான் இன்று புதுச்சேரியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுச்சேரியில் ஒப்பந்தப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யாததும், இதுவரை புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து ஏன் பெறமுடியவில்லை என்றும் கேள்வி எழுப்பினார்.

*தேசிய மகளிர் ஆணையம் 1 (18)*

பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்ய நாட்டில் வலுவான சட்டங்கள் உள்ளன என்றும், சட்டத்தின் கீழ் ஒவ்வொரு பெண்ணும் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் விஜயா ரஹத்கர் கூறினார்.

*தேசிய மகளிர் ஆணையம் 1  (18)*

(வாய்ஸ்)

புதுடெல்லியில் இன்று ஆகாஷ்வாணி ஏற்பாடு செய்திருந்த, பெண்களை மையமாகக் கொண்ட பிரச்சனைகள் மற்றும் அதிகாரமளித்தல் குறித்த பயிலரங்கில் உரையாற்றிய அவர், பாலின உணர் திறனின் அவசியத்தை வலியுறுத்தினார். ஆண், பெண் இருபாலருக்கும் சம வாய்ப்பு மற்றும் மரியாதை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சட்டம் 2013 மற்றும் குடும்ப வன்முறையை நிவர்த்தி செய்யும் சட்டங்கள் போன்ற முக்கிய சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு இல்லாததையும் அவர் சுட்டிக்காட்டினார். பெண்கள் அச்சமின்றி தங்கள் பிரச்சனைகளை புகாரளிக்க சிறந்த உள்கட்டமைப்பு, விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு திருமதி ரஹத்கர் முக்கியத்துவம் அளித்துப் பேசினார். மேலும், ஆகாஷ்வாணியின் செய்திச் சேவைகள் பிரிவின், தலைமை இயக்குநர் தீரஜ் எம். காகாடியா பேசுகையில், பணியிடங்கள் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

*தேசிய மகளிர் ஆணையம் 2  (06)*

தொடர்ந்து பேசிய அவர், சட்ட விதிகளை தவறாக பயன்படுத்துவது மற்றும் தவறான புகார்கள், உண்மையாக பாதிக்கப்பட்டவர்களின் நம்பகத்தன்மையை பலவீனப்படுத்தும் என்றும் எடுத்துக் கூறினார். பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த சட்ட விழிப்புணர்வை பிரத்யேக தொடர் மூலம் பரப்ப, தேசிய மகளிர் ஆணையத்துடன் இணைந்து ஆகாஷ்வாணி ஒரு கூட்டு முயற்சியைத் தொடங்கும் என்றும் அவர் அறிவித்தார்.

***ஜிதேந்திர சிங் (12)***

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இந்தியா-ஜப்பான் ஒத்துழைப்பு நாட்டின் உலகளாவிய ஈடுபாட்டின் வலுவான தூண்களில் ஒன்றாகும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்தர் சிங் கூறியுள்ளார். இந்தியா-ஜப்பான் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு பரிமாற்றத்தின் மாபெரும் இறுதிப் போட்டியில் காணொளி மூலம் உரையாற்றிய அவர், இரு நாடுகளின் 40 ஆண்டுகால இருதரப்பு கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பை எடுத்துரைத்தார். ஜப்பானின் தொழில் நுட்பமும், நாட்டின் திறமையும், அதி நவீன ஆராய்ச்சியில் இரு நாடுகளும் மேம்பட முடியும் என்று கூறிய அவர், நீடித்த வளர்ச்சி உள்ளிட்ட முன்னணி தொழில்நுட்பங்கள் மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள ஜப்பான் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

***ஈராக் (16)***

மேற்காசியாவில் மோதல் தீவிரமடைந்து வரும் சூழலில், முக்கியக் கப்பல் போக்குவரத்துப் பாதையான ஹார்மூஸ் ஜலசந்தியை, மீண்டும் திறப்பதற்கான காலக்கெடுவை நாளை மாலை வரை ஈரான் பூர்த்தி செய்யத் தவறினால் அதன் மின்னுற்பத்தி நிலையங்களையும், பாலங்களையும் தகர்க்க உள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஹார்மூஸ் ஜலசந்தி வழியாக போக்கு வரத்து நடவடிக்கைகளை ஈரான் நிறுத்தியுள்ளதால், உலகளாவிய எண்ணெய் விலைகள் கடுமையாக உயரவும், உலகம் முழுவதும் பணவீக்கம் அதிகரிக்கும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது. இதற்கிடையே, ஈரானின் தலைநகரான தெஹ்ரான் மீது நேற்றிரவு தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யவும், கடல்சார்

நடவடிக்கைகளை பாதுகாக்கவும், இந்திய குடிமக்களுக்கு உதவும் விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.